# கோபமா? கொண்டாட்டமா?

கடந்து சென்ற 2017-ஆம் ஆண்டு கோபத்தின் ஆண்டு (**Year of Anger**) என்று பெயர் பெற்றுள்ளது. உலகில் ஒரு சில பெண்களுக்கு ஒரு சில ஆண்கள் மேல் மிகவே கோபம். ஒரு சில நாடுகளுக்கு வேறு சில நாடுகள் மேல் கோபம். அமெரிக்காவில் பாதி சனங்களுக்கு மீதிப் பாதி சனங்கள் மேல் கோபம். எனவே தான் **Donald Trump** ஆட்சியைப் பிடித்தார் என்று கூட கதைக்கப் படுகின்றது.

ஆனால் அதே நேரத்தில், உலகில் சண்டைகள் பல முடிவடைந்து விட்டன. நோய்கள் பலவற்றிற்கு நல்ல மருந்துகள் வந்து விட்டன. ஆசியாவிலும் தென்னமெரிக்காவிலும் பல நாடுகள் முன்னேற்றப் பாதையில் வேகமாக நடை பயில்கின்றன. புதிய சமூகத் தொடர்பு சாதனங்கள் எங்கேயோ நோக்கி எம்மை அழைத்துச் செல்கின்றன.

குறிப்பாக, 2017-ஆம் ஆண்டில் மூன்று முக்கிய முன்னேற்றங்களுக்கு அஸ்திவாரம் இடப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது:

-1) <u>செயற்கை மூளை</u> (**Artificial Intelligence**) : எடுத்துக் காட்டாக, உலகின் மிகச் சிறந்த செஸ் (**Chess**) விளையாட்டு வல்லுனர்களை அழைத்து வந்து ஒரு கம்ப்யூட்டரிடம் போட்டி போடச் செய்தனர். கம்ப்யூட்டர் அவர்கள் அனைவரையும் தோற்கடித்து விட்டது. மனிதர்களை விட புத்தி மிகுந்த வாகனங்கள், தொழிற்சாலைக் கருவிகள் இனி உருவாக, வழி அமைக்கப் பட்டுள்ளது. **Big data** (புள்ளி விபர ஒருங்கமைப்பு) என்னும் கணிணி முறையைப் பயன் படுத்தி இனி வாகனங்களை ஒன்றோடு ஒன்று பேச வைக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

-2) <u>இயந்திர மனிதன்</u> (**Robotics**) : மொன்றியால் நகரில் அறுவை சிகிச்சை செய்யும் இயந்திர டொக்டர் (மருத்துவர்) இருப்பது எம் அனைவருக்கும் தெரிந்த விடயமே. இப்போது நோயாளிகளைத் தூக்கி ஒரு கட்டிலில் இருந்து மறு கட்டிலுக்கு மாற்றவும், அவர்களுக்குப் பல விதமான பணிகள் புரியவும் இயந்திர நர்ஸ் வந்து விட்டாள். மனைவிக்குப் பதிலாகக் காலையில் எங்களை நித்திரையிலிருந்து எழுப்பி விடவும், குளிப்பாட்டி விடவும், படுத்திருந்த அறையின் போர்வைகளை மடித்து வைக்கவும், எங்களுக்குக் கோப்பி போட்டுத் தரவும், மசாஜ் செய்து விடவும் இயந்திர மனுசி இப்போது வந்த விட்டாள்.

-3) **<u>Block-chain</u>** (சங்கிலித் தொடர் கட்டமைப்பு): இது ஒரு புதிய கணிணி முறை. இதன் மூலம் **Bitcoin** போன்ற புதிய காசுகளை உருவாக்கலாம். ஒரு சில பேர் ஒன்று சேர்ந்து புதிய வங்கி (**bank**) ஆரம்பித்து நடத்தலாம். யாரும் யாரையும் ஏமாற்ற இயலாது. 2017-இல் அடித்தளமாக்கப் பட்ட இந்த புதிய கண்டு பிடிப்புகள் பிறந்திருக்கும் 2018-ஆம் ஆண்டில் உலகின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கொண்டு வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

எனவே எங்கள் புத்தியைப் பயன் படுத்தி இவ்வலகினைச் சாலச் சிறந்த வாழ்விடமாக அமைப்பதற்கான அருளும் ஆற்றலும் இறைவனிடமிருந்து எமக்குக் கொடுக்கப் பட்டுள்ளன. எம் வாழ்வினை அவரின் திருச் சித்தத்திற்கு ஏற்ப நடாத்தி மகிழ்ச்சியும் அமைதியும் பொங்கச் செய்வதற்கான அருளுதவியை அவரிடம் கேட்டு நிற்போம்.

கிறிஸ்துவில் அன்புடன்,

**Rev. Fr. Tiburtius Fernandez. SMA**